

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 317 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 12 – செவ்வாய்க்கிழமை 27 ஜூன் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 317: Thiruvalluvar Year - 2054 - Aani 12 - Tuesday 27 June 2023 - Madurai 12 Pages ₹ 5.00


## தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன் 27 -

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று (27.06.2023) மற்றும் நாளை (28.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

28.06.2023 முதல் 30.06.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 2728 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக் கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பன்னாட்டு சிறு, குறு மற்றும் நடுத்தர

# தொழில் நிறுவனங்கள் நாள் விழா!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன் 27-

சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழா - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றிடும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 27 ஆம் நாள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளினை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என ஆணையிட்டதைத் தொடர்ந்து, இன்று 27.06.2023 காலை 10.30 மணி அளவில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழா முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில், முதலமைச்சர் அவர்கள், சமத்துவபுரம் தந்து சமூக நீதி காத்திட்ட சமூக நீதி காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதியை நிலைநாட்டிடும் விதமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வண்ணம், இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் திட்டமான “அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்” கீழ் முதல் 100 பயனாளிகளுக்கு ரூ.57.55 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்க ரூ.18.94 கோடி மானியத்திற்கான ஆணை வழங்கி திட்டத்தினை தொடங்கி வைக்கிறார்கள்.

### காடம்புலியூரில் மெய்நிகர் கண்காட்சியகம்!

மேலும் இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவையை கருத்தில் கொண்டு செங்கல்பட்டு மாவட்டம்,



கொடூர், திருச்சி மாவட்டம், மணப்பாறை மற்றும் மதுரை மாவட்டம், சக்கிமங்கலம் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகள், குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதல் குறுந்தொழில் குழுமமாக கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா காடம்புலியூரில் முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை உருவாக்கிடும் நோக்கோடு மெய் நிகர் கண்காட்சியகம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்.

மேலும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் பதிப்பின் கீழ் வெற்றி பெற்ற 10 மாணவ அணிகளின் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளுக்கு முதலமைச்சர் அவர்கள் தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ. 10 இலட்சம் வழங்குகிறார்.

### 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்பபு!

இது மட்டுமல்லாமல், சமச்சீர் வளர்ச்சியை முன்னெடுக்கும் விதமாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அனைத்து தொழில் பிரிவுகளையும் உள்ளடக்கிய ரூ.1510 கோடி மதிப்பில் 7,400 வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 100 புதிய முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், கடன் வசதியாக்கல் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பிற்கான ஃபேம் டிஎன் (FaMe TN) மற்றும் சிட்பி (SIDBI) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

விழாவில், தொழில்துறையின் வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வண்ணம் மாநில அளவில் சிறந்த தொழில் முனைவோர் விருது, மாநில அளவில் சிறந்த வேளாண்சார் தொழில் நிறுவனத்திற்கான விருது, மாநில அளவில் சிறந்த மகளிர் தொழில் முனைவோர் விருது, மாநில அளவில் தரம் மற்றும் ஏற்றுமதி நிறுவனத்திற்கான விருது, சிறப்புப் பிரிவைச் சேர்ந்த சிறந்த நிறுவனத்திற்கான விருது ஆகிய விருதுகளும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிதிவசதியினை சிறப்பாக வழங்கிய மூன்று வங்கிகளுக்கான விருதுகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்க உள்ளார்.

இந்த விழாவில் முதலமைச்சர் அவர்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சார்பில் ரூ.1723.05 கோடி மதிப்பிலான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டு, சுமார் 30,000 நபர்களுக்கு இதன்மூலம் வேலைவாய்ப்பும் உருவாக்கப்படும்.

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட

# 13 மசோதாக்களுக்கு ஆளுநர் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை!

### சட்டத்துறை தகவல்!

சென்னை, ஜூன் 27-

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 13 மசோதாக்களுக்கு இன்னமும் ஆளுநர் அனுமதி அளிக்க வில்லை என்று தெரியவந்துள்ளது.

எடப்பாடி கே.பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் தமிழக சட்டசபையில் நிறை வேற்றப்பட்ட இரண்டு மசோதாக்கள் உள்பட ஆளுநரிடம் நிலுவையில் உள்ள 13 சட்டங்களில் அடங்கும் என தமிழக சட்டத்துறை தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழக (திருத்த) மசோதா, 2020 மற்றும் தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தம்) ஆகியவற்றுக்கு ஆளுநர் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை என ‘தி இந்து’ நாளிதழில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்துக்குப் பதில் அளிக்கப்பட்ட ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழக (திருத்த) மசோதா, 2020 மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழக (திருத்த) ஆகியவற்றுக்கு ஆளுநர் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. 2020 அ.தி.மு.க. ஆட்சியில் பன்வாரிலால் புரோகித் ஆளுநராக இருந்தபோது, இந்த இரண்டு மசோதாக்களும் முறையே 2020 ஜனவரி 13 மற்றும் 18ஆம் தேதிகளில் ஒப்புதலுக்காக ராஜ்பவனுக்கு அனுப்பப்பட்டன.

இந்த ஆண்டு ஜூன் 15 தேதியிட்ட பதிலில், சட்டத் துறையின் பொதுத் தகவல் அதிகாரி, சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 13 மசோதாக்கள் (இந்த இரண்டும் உட்பட) இந்த ஆண்டு மே 22 ஆம் தேதி வரை ஆளுநரிடம் நிலுவையில் உள்ளன என்றார்.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத் திருத்த மசோதா, ஆய்வு அதிகாரத்தை ஆளுநருக்கு (வேந்தருக்கு) பதிலாக அரசாங்கத்திற்கு வழங்கவும், துணைவேந்தருக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குழுவில் அரசு வேட்பாளரை சேர்க்கவும் முயன்றது. தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் திருத்த மசோதா, ஆளுநருக்கு பதிலாக ஆய்வு மற்றும் விசாரணை அதிகாரத்தை அரசாங்கத்திற்கு வழங்க முயன்றது. மே 8 அன்று ஆளுநருக்கு அனுப்பப்பட்ட கடைசி சட்டம் தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புதிட்டங்களுக்கான) மசோதா, 2023 ஆகும்.

2021 செப்டம்பரில் பொறுப்பேற்ற கவர்னர் ஆர்.என்.ரவி, மே 4ம் தேதி ஒரு ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், “ராஜ்பவனிலோ அல்லது ஆளுநரிடமோ எந்த மசோதாவும் நிலுவையில் இல்லை” என்று கூறியது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்கள் தொடர்பான எட்டு மசோதாக்களுக்கும், சென்னைக்கு அருகில் சித்த பல்கலைக்கழகம் அமைப்பதற்கான தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழக மசோதா, 2022க்கும் ஒப்புதலை “தடுத்து வைத்துள்ளேன்” என்று ரவி கூறியிருந்தார்.

இருப்பினும், அதே நாளில், அப்போதைய தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்ட 17 மசோதாக்கள் “நிலுவையில் உள்ளன” என்று கூறினார். “நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அவர் [ஆளுநர்] ஒப்புதல் வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளார். அதுதான். வெறும் வார்த்தை விளையாட்டின் மூலம் அவர் அதைக் கடந்து செல்ல முற்பட முடியாது” என்று தென்னரசு கூறியிருந்தார். “மசோதாக்களை நிலுவையில் வைத்திருப்பதற்கும், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கும் உள்ள சட்ட வேறுபாட்டை ஆளுநர் விளக்க வேண்டும்,” என்று அவர் மேலும் கூறினார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட பதிலில், 17 மசோதாக்களில் குறைந்தபட்சம் ஐந்து மசோதாக்களுக்கு இதுவரை ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார். அதைத் தான் அமைச்சர் தென்னரசு நிலுவையில் வைத்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

சட்டத்துறையின் தகவலின்படி, ஆளுநரிடம் தமிழ்நாடு பல்கலைக் கழகங்களின் விதிகள் சட்டத்திருத்த மசோதா 2022, சென்னை பல்கலைக்கழக திருத்த மசோதா 2022 (குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்காக ஆளுநர் ரிசர்வில் வைத்துள்ளார்) டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாவது சட்டத்திருத்தம்) தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு மீன்வளத்துறை பல்கலைக்கழக (திருத்த மசோதா) தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலை கழகம் தொடர்பான மசோதாக்கள் நிலுவையில் உள்ளன.

இந்தப் பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதற்கான அதிகாரம் மாநில அரசிடம் இருக்க வேண்டும் என்பது அந்த மசோதாக்களின் முக்கிய அம்சமாகும்.

“10 பல்கலைக்கழகங்களில் நிதிச் செயலாளரை சிண்டிகேட் உறுப்பினராகச் சேர்ப்பது தொடர்பான ஒரு மசோதாவும் நிலுவையில் உள்ளன.

நில ஒருங்கிணைப்பு மசோதாவைத் தவிர, இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட நிலுவையில் உள்ள மற்ற இரண்டு மசோதாக்கள் ஏப்ரல் 28, 2023க்கு முன் அதாவது மே மாதம் ஆளுநரின் நேர்காணலுக்கு முன்னதாக ராஜ்பவனுக்கு அனுப்பப்பட்டன.

ஏப்ரல் 30, 2023 அன்று அல்லது அதற்கு முன் அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட ஏதேனும் மசோதாக்கள் ஆளுநரிடம் நிலுவையில் உள்ளதா என்று கேட்டதற்கு ஞாயிற்றுக்கிழமை வரை எந்த பதிலும் வரவில்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பதிலின்படி, ரவி கடந்த ஆண்டு 48 மசோதாக்களுக்கும், இந்த ஆண்டு 21 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளார். தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்டத் தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம், 2022யை ஆளுநர் திருப்பி அனுப்பியதால் சட்டமன்றத்தால் மீண்டும் நிறைவேற்றப்பட்டது.

## ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்றிருந்தால்

# யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம்!

## சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஜூன் 27-

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழ்நாடு அரசின் உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு தரப்பில் வழக்கறிஞர் அருண் நடராசன் ஆஜராகி வாதங்களை முன்வைத்தார்.



இதனையடுத்து, ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்றிருந்தால் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. குழு அறிக்கை அளிக்கும் வரை காத்திருக்க வேண்டியது இல்லை என்றும், கோவில்களின் சொத்து பதிவேட்டில் கூறப்பட்ட ஆகமத்தில் தேர்ச்சி பெற்றவரை நியமிக்கலாம் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

# மணிப்பூரில் நீடிக்கும் வன்முறை!

புதுடெல்லி, ஜூன் 27–

மணிப்பூர் வன்முறை தொடர்பாக டெல்லியில் உள்ள இல்லத்தில் பிரதமர் மோடி ஒன்றிய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார். மணிப்பூரில் மைதேயி மற்றும் சிறுபான்மை பழங்குடி சமூகத்தினரிடையே கடந்த மே மாதம் மோதல் ஏற்பட்டது முதல் தொடர்ந்து வன்முறை நிலவி வருகிறது. இதுவரை 120 க்கும் மேற்பட்டோர் வன்முறைக்கு பலியாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். மக்களின் வீடுகள் தீக்கரையாகியுள்ளது.

ஒன்றிய, மாநில அமைச்சர்களின் வீடுகளும் தீக்கிரையாகின. இதனைத் தொடர்ந்து, கடந்த வாரம் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் அனைத்துக் கட்சிகள் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற கட்சிகள் அனைத்துக் கட்சி குழுவை மணிப்பூருக்கு அனுப்ப கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில், அமெரிக்க, எகிப்து பயணத்தை முடித்து விட்டு டெல்லி திரும்பிய பிரதமர் மோடி மணிப்பூர் நிலவரம் குறித்து உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட அமைச்சர்களிடம் ஆலோசனை நடத்தினார்.

## 62 ஆண்டுகளுக்குப் பிறகு அதிசயம்:

# டெல்லி, மும்பையில் ஒரே நாளில் தென்மேற்கு பருவமழை தொடக்கம்!

புதுடெல்லி, ஜூன் 27 -

62 ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லி, மும்பையில் ஒரே நாளில் தென்மேற்கு பருவமழை தொடங்கிய அதிசயம் நடந்துள்ளது. பொதுவாக தென்மேற்கு பருவ மழை கேரளாவில் ஜூன் 1ந் தேதி தொடங்கும். ஆனால், இந்த ஆண்டு ஜூன் 8ந் தேதிதான் தொடங்கியது. அதுபோல், வழக்கமாக மும்பையில் ஜூன் 11ந் தேதியும், டெல்லியில் ஜூன் 27ந் தேதியும் அந்த பருவமழை தொடங்கும்.

ஆனால், இந்த ஆண்டு டெல்லியிலும், மும்பையிலும் நேற்று முன்தினம் ஒரே நாளில் பருவமழை தொடங்கியது. டெல்லியில், திட்டமிட்ட தேதிக்கு 2 நாட்கள் முன்பாகவும், மும்பையில் 2 வாரங்கள் தாமதமாகவும் தொடங்கியது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், டெல்லியில் உள்ள தான்சா வானிலை மையத்தில் அதிகபட்சமாக 80 மி.மீ. மழை பதிவானது. அதே காலகட்டத்தில், மும்பையில் உள்ள சான்டாகுரூஸ் வானிலை மையத்தில் அதிகபட்சமாக 176 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை காஷ்மீர், லடாக், இமாசலபிரதேசம், உத்தரகாண்ட் போன்ற வடமாநிலங்களில் முன்கூட்டியே தொடங்கியது. ஆனால், மும்பை போன்ற மத்திய மாநிலங்களில் தாமதமாக தொடங்கியுள்ளது. இதற்கு ‘பிபர்ஜாய்’ புயலின் பயணவழிதான் காரணம் என்று மூத்த விஞ்ஞானி டி.எஸ்.பாய் தெரிவித்தார்.